134

விலை 0—1—3 "UDAYAM" Weekly. Reg. No.

15 JAN 1947
MADRAS

134

# உதயம்

வார வெளியீடு. ஆசிரியர் :— M. கந்தசாமி

மலர் 1 | திருவத்திபுரம் 8—12—46 வியஞூ கார்த்திகைமீ 23உ ஞாயிறு | இதழ் 19

## ★ ஆரம்ப ஆசிரியர்களின் கோரிக்கை ★

உலகில் எல்லா நாடுகளும் எல்லாத் துறைகளில் முன்னணியிலிருந்து வருகின்றன. ஆனால் நம் நாடுமட்டும் பின்னணியில் முதல் பரிசு வாங்கும் நிலையிலிருந்து வருகிறது. இதற்கு முக்கிய காரணம் அந்நாடுகள் கல்வித் துறையில் முன்னேறியிருப்பதும் நம்நாடு அத்துறையில் மோசமான நிலையிலிருக்கிறது என்பதுமாகும் இந்நாட்டில் சமீபத்தில் எடுக்கப்பட்டுள்ள மக்கள் எண்ணிக்கைப் பட்டியலிலிருந்து தெரிந்து கொள்ளலாம். இவ்வளவு பரிதாபகரமான நிலையிலிருப்பதற்கு கல்வி கற்பிப்பதில் உள்ளகோளாறு என்பதை யாராலும் மறுக்க முடியாது.

அதிலும் கல்வி கற்பிப்பதில் பாடத்திட்டங்களில் இருந்துவரும் குறைபாடுகள் ஒருபுறமிருக்க கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் நிலை பெரும் குறைபாடுடையதாகும். ஆசிரியர்கள் நிலை மிகக் கேவலமானதாக இருக்கும் வரை இந்நாட்டில் கல்வித்துறையில் முன்னேற்றம் காண முடியாது. கீழே, ஈரோடு ஆரம்ப ஆசிரியர்கள் வேண்டுகோள் ஒன்று வெளி வருகிறது. அதைக் கண்ணுறும் தோழர்களுக்கு ஆரம்ப ஆசிரியர்கள் நிலை எவ்வளவு பரிதாபகரமானதாக யிருக்கிறது என்பது விளங்கும். இந்த நிலையில் அவர்களை வைத்திருந்தால் இந்நாட்டுக் கல்வி வளர்ச்சியடையுமா என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

எனவே, உண்மையாகவே, இந்நாடு கல்வியில் அபிவிருத்தி யடையவேண்டுமானால், முக்கியமாக ஆரம்ப ஆசிரியர்களின் நிலையை உயர்த்த பாடுபடவேண்டும். சர்க்காரும் பொதுமக்களும் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

இவ்வளவு தாமாவது ஆரம்ப ஆசிரியர்கள் நிலைமைபற்றி பொது மக்கள் உணர்ந்துகொள்ள முடிந்ததென்றால் காரணம் எதோ ஆங்காங்குள்ள சிற்சில ஆரம்ப ஆசிரியர்கள் துணிந்து முன் வந்து தங்கள் நிலையை விளக்கியதேயாகும். இது மட்டும் போதாது. ஆரம்ப ஆசிரியர்கள் அதிலும் குறிப்பாகத் தமிழ் நாட்டிலுள்ள ஆசிரியர்கள் தங்களுக்கென ஒரு தனி கழகம் அமைத்துக் கொண்டு தங்கள் குறைகளை பொதுமக்களுக்கும் சர்க்காருக்கும் எடுத்து விளக்கி பரிகாரம் தேடிக் கொள்ள முன் வரவேண்டும். ஒரு சிலராவது எத்தகைய கஷ்டநஷ்டத்தையும் பொருட்படுத்தாமல் துணிந்து முன் வந்தாலொழிய அவர்கள் நிலை உயர்வடைய முடியாது.

இப்பொழுது மங்களூரிலிருந்து ஆரம்ப ஆசிரியர் கோஷ்டி யொன்று சைக்கிளில் சென்னையை நோக்கி புறப்பட்டு வருகிறதாக கீழேகாணும் வேண்டுகோளிலிருந்து தெரியவருகிறது. இதுவரவேற்கக் கூடிய காரியமாகும்! சென்னைக்குச் சென்று தங்கள் குறைகளை சர்க்காருக்கும் பொது மக்களுக்கும் எடுத்துரைக்கப் போகிறார்கள் என்று அறிகிறோம். இம் முயற்சி வெற்றிபெற வேண்டும் என ஆசைப்படுகிறோம். பொதுமக்கள் அதிலும் இந்நாட்டில் கல்வி வளர்ச்சியடைய வேண்டுமென்ற கவலையுடையவர்கள் இக்கோஷ்டியினருக்கு தங்களாலான உதவியை அளிக்கவேண்டியது அவர்களது முக்கிய கடமையாகும்.

அவ்வேண்டுகோள் :—

"நாட்டின் பெருமைக்கும், நாகரிகத்தின் வளர்ச்சிக்கும், சமூக முன்னேற்றத்திற்கும், ஆட்சித்திறனுக்கும் அடிப்படையான கல்வியையும் அறிவையும் தக்க அஸ்திபாரம் போட்டு நாட்டில் நிலை நிறுத்துபவர் ஆரம்ப ஆசிரியர்கள். ஆளும் அரசனையும் அறிவுமிக்க அமைச்சரையும் ராஜதந்திரிகளையும் அரும் பெரும் ஆன்றோர்களையும் "கல்வி" எனும் பால் ஊட்டி ஆதரித்து வளர்ப்பவர்கள் ஆரம்ப ஆசிரியர்கள். ஆனால் அவர்களுடைய நிலை என்ன? வாழ்க்கையில் மிக இன்றியமையாத உணவு உடை முதலியவற்றைக் கூட வாங்க முடியாத நிலையிலிருக்கிறார்கள். கிடைத்தாலும் ஒன்றுக்கு நான்கத்தனையாக விலைகொடுத்து வாங்கவேண்டிய இந்த நிலையில், ரூ 10, அதிகப்பட்டால் ரூ. 15-க்கு மேல் சம்பளமே பத்தாத பெரும்பான்மையான ஆரம்ப ஆசிரியர்களின் நிலைமை அந்தோ! மிகபரிதாபம். அச்சம்பளமும் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையே பெரும் பான்மையான ஆசிரியர்களுக்கு கொடுக்கப்படுகின்றது என்றால் இதைவிட கேவலமும் பரிதாபமுமான காரியம் வேறெதுவும் உண்டோ?

ஆசிரியர்களைத் தக்கவாறு ஆதரிக்காமல் அவர்களின் வாழ்க்கைக்கு இன்றியமையாத சௌகர்யங்களைச் செய்து கொடுக்காமல் ஒருநாடு இருந்தால், அந்நாட்டில் எவ்வாறு கல்வியும் அறிவும் தலையெடுக்க முடியும்?

ஆகவே, பெரியோர்களே! இத்தகைய குறைபாடுகளை பொது மக்களுக்கு அறிவிக்கவும், இம்மாகாண மந்திரிகளுக்கும், M. L. C., M. L. A.க்களுக்கும் ஆரம்ப ஆசிரியர்களின் பரிதாப நிலையை உணர்த்தவும், சென்னை மாகாண ஆரம்ப ஆசிரியர் சங்கமானது மங்களூரிலிருந்து சென்னைக்கு ஆசிரியர் கோஷ்டி யொன்றை அனுப்பத் தீர்மானித்துள்ளது.

அக்கோஷ்டியில் பலதரப்பட்ட சட்கிகளைச் சார்ந்த 21 ஆசிரியர்கள் இருக்கிறார்கள். மங்களூரிலிருந்து மதராஸ் வரை சைக்கிளிலேயே செல்லும், அக் கூட்டத்தினர் போய்வர ஏறக்குறைய ரூ. 1071 செலவாகும். அச்செலவை ஏழை ஆரம்ப ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் உள்ளதால் இந்நகரத்திலுள்ள கல்வியறிஞர்களையும், கருணையுள்ள பொது மக்களையும் தாராளமாகப் பண உதவிசெய்து ஆதரிக்க வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

அந்த அந்த கோஷ்டியினர் ஈரோடு வந்துசேருகின்ற நாளில் அவர்களை வரவேற்று நமது நன்கொடையை ஒரு பொதுக்கூட்டத்தில் அவர்களுக்கு அளிக்கவும் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது.

இந்நிதியைச் சேகரிக்க இந்நகரிலுள்ள பல்வேறு ஆரம்பப் பள்ளிகளின் ஆசிரியர்களடங்கிய ஒரு குழு அமைக்கப்பட்டு, அக் குழுவினர் பொது மக்களிடமிருந்தும் இன்னும் பல கழகங்களின் அங்கத்தினரிடமிருந்தும் நன்கொடை வசூலிக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர்"

ஈரோட்டில் இக்கோஷ்டியினரை வரவேற்று உபசரிக்க தோழர் எட்வர்ட் W. அவர்களைத் தலைவராகவும் தோழர் K. பழனியப்பன் அவர்களை செயலாளராகவும் மற்றும் 10 பேர்களை குழுவினராகவும் கொண்ட ஒரு குழுவொன்று நிறுவப்பட்டிருக்கிறது. இதுபோல் ஆங்காங்கு நிறுவப்படும் அவர்களை வரவேற்க. பொதுமக்கள் இத்தகைய குழுவினருடன் ஒத்துழைப்பார்கள் என்று நம்புகின்றோம்.

# ★ எதிரொலி ★

(சென்ற வாரத் தொடர்ச்சி)

மரக :—அண்ணா! தங்களிடமிருந்து இவ்வளவு குள்ளமான கருத்தை நான் எதிர்பார்க்கவில்லை, சமதர்மம் உலகம் ஒப்பும் சங்கதியாய்விட்டது, வேலன் ஏழையாயிருந்தாலும், வேறு குலத்தானாயிருந்தாலும் நம்மைப்போல் மனிதன் என்பதை உலகம் மறுக்கப்போவதில்லை. ஏன்? அவன் நம்மைக் காட்டிலும் மேலான கலைஞன் என்பதை உங்களால் தான் மறுக்க முடியுமா?

சொக் :—(வெறுத்து) கலைஞன்......! கலைகலையென்று சொல்லிக்கொண்டு, குப்பைமேடு கோபுரமாவது எனக்குச் சிறிதும் பிடிக்கவில்லை!

மரக :—கோபுரத்தைக் குப்பை மேடாக்கும் குணமிருப்போர்க்குப் பிடிக்காதுதான்! சமரச நோக்கமும் சமத்துவ நினைவும் கலைப்பற்றும் மனிதப் பண்புடையோர்க்குத் தேவையண்ணா!

சொக் :—(சினந்து) அப்போ, நான் மனிதப் பண்பற்றவனென்று சொல்லுகின்றாயா? மரகதம்...?

மரக :—அப்படிச் சொல்லவில்லையே நான், தமிழும், இசையும்...... (வேலன் வருகிறான்)

வேல :—என்ன விவாதம் பலமாயிருக்கிறது. எதைப்பற்றியோ? நானறியலாமா?......

சொக் :—(சினந்து) பட்டாளத்துப் பட்டியிலிருந்து வந்திருக்கும், ஒரு மிருகத்தைப் பற்றித்தான்!

வே :—விளங்கவில்லையே!

சொக் :—விளங்காமலேயே போகட்டும், போ!

(வேகமாகப் போகிறான்)

வேல :—என்ன!... அண்ணா இப்படிக் கோபித்துக் கொண்டு போகிறார்? அப்படியென்ன இங்கு நடந்தது?

மரக :—போர்வீரன் கலைஞனாக முடியாதென்பது அண்ணாவின் அபிப்பிராயம், மாறுபட்டது என் கருத்து, பேச்சில் வீணாகக் கோபித்துக்கொண்டு போகிறார். தோல்வியைத் தாங்காத உள்ளம்!

வேல :—மரகதம்? நான்பாடுவது அவர் காதுக்கு வேதனையைக் கொடுக்கிறதா? என்மேல் ஏன் அவ்வளவு கடுப்பு?

மரக :—ஊஹும் ...அதெல்லாம் ஒன்றுமில்லை ... அது பழமைப் பித்து! ... உம் நேரமாகிறது, நான்போக வேண்டும், செல்வி வீட்டில்தானே இருக்கிறாள்?

வேல :—இல்லை, பயிருக்குத் தண்ணீர் பாய்ச்சுகிறாள்.

மரக :—(சிறிது யோசித்து)... உம்... நான் வருகிறேன்.

வேல :—மரகதம்!...

மரக :—பிறகு சந்திப்போம். (போகிறான்)

வேல :—ஆஹா! போய்விட்டதே பொற்பதுமை! அன்புச் சுடர் மறைந்ததே ...! ஆம்! என்மனம் ஏன் இப்படிக் குழம்புகிறது?... நினையாவிடினும் வேதனை, இவளை நினைத்தாலும் வேதனை! பார்க்காவிடினும் சோகம், இவளைப் பார்த்த பிறகும் சோகம்! மரகதம்! மாயக்காரி! உன் வடிவழகும், அன்புகனிந்த பேச்சும் மனதும் என் உள்ளத்தை மட்டுமல்ல, உயிரையே அடிமை கொண்டுவிட்டன!... ஆம்! எனக்கெப்படி இந்த ஆசை வந்தது? ...' ஏன் வந்தது? ... மரகதம் மாத்திலிருக்கும் தேன். நான் மடுவிலிருக்கும் முடவன்!...... ஆ! நினைக்கவே பயமாயிருக்கிறதே! இருவர்க்கும் உயிர் ஒன்றுதான். என்னபயன்? வானத்து மேகமும் பூமியின் புழுதியும் புகையும் பார்வைக்குத்தானே ஒன்று! கடல்மீனும் கானகத்துப் பறவையும் கூடி பாலைவனத்தில் வாழுமா? ஆனால் ...... ஆம்! அவள் மனது வைத்தால் எதுவும் முடியும் ......! பார்ப்போம். (போகிறான்)

## காட்சி 5

(மிட்டாதார் மாளிகையில்)

சொக் :—அப்பா இதை நன்றாக யோசிக்க வேண்டும் அவர்கள் நடவடிக்கை மிஞ்சிப் போகிறது, மரகதத்திற்குக் கொடுத்த செல்லம், நம் அந்தஸ்தையே பாதிக்கும் போலிருக்கிறது!

பொன் :—சொக்கலிங்கம்! அவசரப்பட வேண்டாம், வேலனும் மரகதமும் அந்நாளில் சகோதரர்களைப்போல் பழகினவர்கள், மரகதம் அறிவுடையவள், வேலனும் உலகறியாத மூடனல்ல! நீ அவசரப்பட்டு இப்படியெல்லாம் சந்தேகப்படக் கூடாது.

நேய் :—மகனே! இந்த மாதிரியான வார்த்தைகளை நீ வாயாலும் உச்சரிக்கக் கூடாது. ஆமாப்பா! சிறுபொறி பெருந்தீயாய்விடும்!

சொக் :—(சினந்து) அது, நான் சொன்னால் அப்படித்தானிருக்கும் நெருப்பையும் பஞ்சையும் பக்கத்தில் சேர்த்தீர்கள் பட்டால்தானே தெரியும்! படுங்கள்! (வேகமாகப் போகிறான்)

நேய் :—சொக்கலிங்கம்! சொக்கலிங்கம்!!... பையன் ரொம்ப கோபித்துக்கொண்டு போகிறான்.

பொன் :—இவன் கோபத்தை இன்றா பார்க்கிறோம்? முரட்டுச் சொக்கன்தானே! கள்ளமில்லாத குழந்தைப் பருவத்தில் வேலனும் மரகதமும் சேர்ந்து விளையாடுவதைக் கண்டாலே இவனுக்குப் பிடிக்காது, பாவம்! வயதாகியும் குணத்தை மாற்றிக் கொள்ள முடியவில்லை!

நேய் :—என்னவிருந்தாலும் மரகதத்திற்கு இவ்வளவு செல்லம் கூடாது தான், அவளைப்படிக்க வைத்ததே தவறென்று படுகிறது. எப்பொழுது பாருங்கள் புத்தகமும் கையுந்தான், பாட்டென்றால் பைத்தியம்! வேலன் இப்போ நன்றாகப் பாட கற்றுக்கொண்டு வந்திருக்கிறானா, அவன் குரல் காதில் விழுந்ததோ இல்லையோ, தன்னையே மறந்து விடுகிறாள்!

பொன் :—படிப்பையும், இசை, நாடகம் போன்ற கலைகளையும் எட்டிக்காயாக மதிக்கும் உனக்கு எங்கேயம்மா அதன் பெருமை தெரியப் போகிறது? போங்கோ! போயி......அடுப பங்கரை வேலையைப் பாருங்கோ!......

நேய் :—உம்...என்னமோ செய்யுங்க, நான் சொன்னாக் கோவந்தான் வரும். (போகிறாள்)

## காட்சி 6

செல்வி :—மாமா! தோசை சுட்டு வச்சிருக்கிறேன், அலுமினியக் கோப்பையிலே தொவையல் இருக்குது, சாடியிலே ஊறுகாயுமிருக்குது, போட்டுச் சாப்பிடுங்க, இன்னிக்கி மேலங்காட்டு வயல் நெல் அறுவடை, பொழுதுக்கும் என்னைப் பாத்துக்கச் சொல்லியிருக்காங்க, நான் போகிறேன்.

வேல :—நீ சாப்பிட்டையா இல்லையா?

செல் :—பழையது குடிச்சிட்டேன் மாமா.

வேல :—சரி, போய்வா.

---

(இதன் தொடர்ச்சி 7.ம் பக்கம்)

# ஏய்த்திட்டாய்!

[N. E. பாலகுரு]

1 ஆற்றங் கரையருகே அமர்ந்திருந்தேன் ஓர் குன்றில்
அப்பொழுதோர் இளமங்கை அவ் வழியாய்க் குடம்
[கொண்டு
ஊற்றுநீர் எடுத்துத் தன் இட துகையால் செப்பை
இடுப்பில் இரு என்று இருக்கிப் பிடித்தபடி

2 வல துகை வாலிபத்தின் வளம் காட்டும் தோரணையில்
வளையல் ஒலிகுலுங்க வந்துபோய்க் கொண்டிருந்தாள்.
இளமையின் ஏவலினால் என் கண்கள் அவள் முகத்தை
எட்டி எட்டிப் பார்த்தபடி எவ்வளவோ நாள் இருந்தும்

3 முழுமுகமும் கண்டதில்லை முக்காலும் உண்மையிது
முந்தானை காற்றினிலே மொட மொட வென்றடிக்கும்
[அடி
விழுகாத மான் வலையில் விழுந்தவுடன் வேடனுக்கே
விளைந்திடும் இன்பம் போல் விளையும் என்னுள்ளத்துள்

4 என்செய்வேன் இதையெல்லாம் எண்ணி எண்ணி
[ஏங்கிடுவேன்
எப்படியோ என் அன்பை இழுத்திட்டாள் குயில்
[மொழியாள்
என்னதான் ஆனாலும் எப்படியும் பேசிடுவோம்
என்றெண்ணி ஓர்நாள்நான் எழுந்தவுடன்
[சென்றிருந்தேன்

5 புனலாடிப் பூ முடிந்து பிறைப்பொட்டு நெற்றிவைத்து
புன்சிரிப்பை முகம்காட்ட பொன்னுடலாள் முன்
[வந்தாள்
என் முகத்தைக் கண்டுநாணி தன்முகத்தைத் தாழ்த்தி
[ஏகி
பின்கால் முள்பட்டதுபோல் குனிந்தென்னைப் பின்
[பார்த்து

6 அரைச்சிரிப்பு தந்தாள் அடியேன் நான் சென்று
நேற்றைக்குயேன் இங்கே வரவில்லை? என்றேன்
நேற்றைக்குத்தான் நீங்கள் ஊற்றருகே நின்றீரே!
தெரியாதார் போலன்றோ திரிகின்றீர் வார்த்தைகளை

7 என்றாள் என்னுள்ளத்தில் இருந்தீந்தேன் முழுச்சிரிப்பும்
இருக்கட்டும் நாளைஇங்கு வருகின்றேன் எனச்சென்றாள்
குன்றருவி விழுகின்ற கோவிலடுத் திருக்கின்றேன்
குடம்கொண்டு அங்கேவா! என்றேன் சரியென்றாள்.

8 மறுநாள் நான் சென்றனக்கு முத்தமிழாள்
[நின்றிருந்தாள்
மணிமூன்றுக் கெல்லாம் நான் பனியுடனே வந்தே
[னென்றாள்
மன்னிக்க வேண்டும் என்றேன் மன்னிப்பதெதற்
[கென்றாள்
மயக்கம் வருகதென்றாள் மயங்கிக் கீழ் விழப்போனால்.

9 பயத்தால் உடல்நடுங்கி படுக்கவைத்தே னென்மடியில்
பாரென்றேன் பார்க்கவில்லை. யார்? இதென்றாள்
[கைதடவி
பயந்தபடி நானென்றேன் பார்த்தாள்! சிரித்தாள்!
படக்கென்று எழுந்தாள் பருகினோம் இன்பம்!
ஏய்த்திட்டாய் என்றேன் இன்பத்திற்கென்றாள்

# கட்டணங்களை உயர்த்த யோசனையா?

ஒரு நாட்டில் தொழிற்சாலைகள் பெருகுவதற்கும், வியாபாரம் வளர்வதற்கும் துணைபுரிவது போக்கு வரவு சாதனங்களாகும். இவைகள் எவ்வளவு அதிகரிக்கின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு நாட்டின் செல்வம் பெருகும். பிரிட்டனிலும் அமெரிக்காவிலும், ஜெர்மனி முதலிய நாடுகளிலும் செல்வம் பெருகுவதற்குக் காரணம் வியாபாரமும் தொழிற்சாலைகளும் பெருகி வருவதேயாகும். இவைகள் பெருகுவதற்கு வலைவீசினாற்போல் ரயில்பாதைகள் காணப்படுவதும், கால்வாய்கள் செல்லுவதுமாகும்.

பொதுவாக தொழிற்சாலை நன்குவேலை செய்ய வேண்டுமானால், தொழிற்சாலைக்கு வேண்டிய இரும்பு நிலக்கரி முதலியவைகள் குறைந்த செலவில் விரைவில் கிடைக்கக்கூடியதாக யிருக்க வேண்டும். மூலப் பொருள்களும் அதுபோலவே வந்து சேரக்கூடியதாக யிருக்கவேண்டும். அடுத்தாற்போல் உற்பத்தியானப் பொருட்களை அதுபோலவே கொண்டு போய் சேர்க்கக் கூடியதாக யிருக்கவேண்டும். அந்தப்படி பார்த்தால் நம் நாட்டில் அத்தகைய சௌகரியங்கள் இல்லை; போக்குவரத்து சாதனங்கள் தாராளமாக யில்லவுமில்லை. குறைந்த செலவில் வந்து சேரக்கூடிய நிலையிலுமில்லை. கட்டண உயர்வு அவ்வளவு அதிகமாக யிருக்கிறது.

உதாரணமாக இன்று நாட்டில் சர்க்கரைக்குப் பஞ்சமிருந்து வருகிறது. யுத்தத்திற்கு முன் சர்க்கரை வீசை 6 அணாவாக விற்று வந்தது. இப்பொழுது 15 அணாவாக விற்கிறது. 2½ மடங்கு அதிகரித்திருக்கிறது. இதற்குக் காரணம் என்ன? போதிய அளவு சர்க்கரை கிடைப்பதில்லை யென்பது தான். ஆனால் இன்று இந்நாட்டிலுள்ள சர்க்கரை மில்கள் எல்லாம் எல்லா பருவங்களிலும் வேலை செய்யுமேயானால் சர்க்கரை பஞ்சம் இவ்வளவு தூரம் வராது. அவைகள் வேலை செய்ய முடியவில்லை. காரணம், போக்கு வரவில் உள்ள கஷ்டமேயாகும். ஒவ்வொரு பருவத்தில் ஒவ்வொரு பகுதியில் வெல்லம் கிடைக்கும். கிடைக்கிற பகுதிகளிலிருந்து மில் இருக்கும் இடத்திற்குக் கொண்டுவந்து சேர்ப்பதென்றால் இன்றுள்ள கட்டண விகிதத்தில் சாத்தியமில்லை யென்று சொல்லப்படுகிறது. இதனால் உற்பத்தியை நிறுத்திவைத்து விடுகிறார்கள். எனவே சர்க்கரைக்குப் பஞ்சம் ஏற்படாமல் என்ன செய்யும்? இந்த நிலையில் இன்னும் ரயில்வே கட்டணத்தை உயர்த்தப் போகிறார்களாம். இன்றுள்ள பணப் புழக்கம் நிரந்தரமானதல்ல. யுத்தத்தின் காரணமாக ஏற்பட்ட நிலைமை இது. இது அதிக நாளைக்கு நீடிக்காது. இதை நம்பி கட்டணத்தை யுயர்த்துவது நேர்மையுமாகாது. இதனால் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கும். வியாபாரத்திற்குத் தடை ஏற்படும். தொழில்கள் பெருகாது. எனவே, ரயில்வே கட்டணம் உயர்த்துவதை மத்திய சர்க்கார் தடுத்தால் தான் உண்மையிலே நன்மை செய்யாவிடினும் தீமையாவது செய்யாதவர்களாவார்கள்.

கோழி கூவிற்று! வையம்,
கொண்டதோர இருளைத், தங்க
மேழியால் உழுதான் அந்த
விரிகதிர்ச் செல்வன்; பின்னர்
ஆழிசூழ் உலகின் சாட்சி
அரும்பிற்று! முனைய விழ்ந்து
வாழிய வைய மென்று
மலர்ந்தது காலை வானம்!

—புரட்சிக்கவி பாரதிதாசன்

---


# உதயம்

மலர் 1 8—12—46 இதழ் 19


## சங்கமா? சரக்கா?

நாட்டிலே மக்கள் தேவையான பொருட்கள் கிடைக்காமல் கஷ்டப் படுகிறார்கள். பொருட்கள் இல்லாமல் இல்லை பொருட்கள் தேவைக்குமேல் நாட்டில் இருக்கின்றன. ஆனால் அவைகளை வாங்கும் சக்தியை மக்கள் பெறவில்லை. இதற்குக் காரணம் உற்பத்தியிலும் வினியோகத்திலும் உள்ள வித்தியாசமேயாகும். இந்த வித்தியாசம், இடையிலுள்ள ஒரு கூட்டத்தார். இருந்து வருவதால் நிலைத்துவருகிறது. அந்தக் கூட்டம் தங்கள் இஷ்டம்போல் கொள்ளையடித்து . வருவதால் மக்கள் வாங்கும் சக்தியை இழந்து வருகிறார்கள்.

உற்பத்தி செய்பவன் பெறும் ஊதியத்திற்கும் பொருட்களை வாங்கும் விலைக்கும் உள்ள ஏற்றத்தாழ்வை எண்ணிப் பார்த்தால்தான் நாம் சொல்வதின் பொருள் விளங்கும். உற்பத்திக்கு ஆகும் செலவுக்கும் அப்பொருளை விற்கும் விலைக்கும் உள்ள வித்தியாசத்தை எண்ணிப் பார்த்தாலே மக்கள் வாங்கும் சக்தியை இழந்திருப்பது நன்கு விளங்கும்.

பொருட்கள் உற்பத்தியானதும் அப் பொருட்களை விற்பது ஒரு சிலருடைய விருப்பத்திற்குட்பட்டு விடுவதால், அக் கூட்டத்தார் தங்கள் இஷ்டம்போல் விலையை உயர்த்திவைத்து விடுகிறார்கள். குறித்த விலைக்கு விற்காமல் போனால் அப் பொருட்களை அழித்தாலும் அழிப்பார்களேயல்லாது விலையைக் குறைத்து விற்கமாட்டார்கள். இதற்குக் காரணம் என்ன? வினியோகிப்பதில் உள்ள குறைகளேயாகும். வினியோகித்தலை சில தனிப்பட்டவர்களிடம் விட்டு விடுவதால் இக் குறைகளிருந்து வருவதுடன் மக்கள் வாங்கும் சக்தியையும் இழந்து விடுகின்றனர்.

ஆதலால்தான் சுயமரியாதைக் கட்சியும் திராவிடர் கழகமும் நெடு நாட்களாக பொருட்களை வினியோகிப்பதில் மாற்றம் செய்யவேண்டும், அதாவது கூட்டுறவு முறையில் வினியோகிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்வதாக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு வந்திருககின்றன.

உற்பத்தியான பொருள் மக்களுக்கு நேரடியாக கிடைக்குமாறு செய்ய வேண்டுமேயொழிய இடையில் ஏஜன்சிகள், தரகர்கள் கூடாது என்று வற்புறுத்தி வரப்பட்டிருக்கிறது. இதற்கு இப்பொழுதுள்ள அதாவது இன்றைய சமுதாய அமைப்பு முறையில் கூட்டுறவு மார்க்கம் ஒன்றுதான் ஏற்றது என்று எடுத்துக் காட்டப் பட்டிருக்கிறது. பொருட்களை வாங்குபவர்களைக் கொண்ட ஒரு சங்கம் அமைத்து அவர்களே உற்பத்தியாகும் சரக்குகளை நேராக உற்பத்தியிடத்திலிருந்து வரவழைத்து வினியோகிப்பது என்று விளக்கப்பட்டிருக்கிறது.

காலஞ்சென்ற தோழர் செ. தெ. நாயகம் அவர்கள் கூட்டுறவு முறையில் மக்கள் என்னென்ன வகையில் நன்மையடையலாம் என்பதை பல கட்டுரைகள் மூலமாகவும் சொற்பொழிவுகள் மூலமாகவும் விளக்கியுள்ளார்.

எனவே, பொருட்களை வினியோகிப்பதில் அதாவது. விற்பதில் தனிப்பட்டவர்களைவிட கூட்டுறவு சங்கங்கள் அதுவும் அப்பொருட்களை வாங்குபவர்களைக் கொண்ட சங்கங்கள் தான் சிறந்தன வென்பது திராவிட மக்களது கருத்தாகும்.

ஆனால் இங்கு ஒன்று குறிப்பிட ஆசைப்படுகிறோம். அதாவது தனிப்பட்டவர்கள் பொருட்களை வாங்கி விற்பதற்குப் பதிலாக, கூட்டுறவு சங்கங்களின் மூலமாக பொருட்களை வாங்கி விற்றால் மக்களுக்கு நன்மை ஏற்படும் என்பது பொதுப்படையான கருத்தாக யிருந்தாலும், இதிலும் தனிப்பட்ட வியாபாரிகள் ஒன்றாக சங்கமாக கூட்டுறவு முறையில் சேர்ந்து கொண்டு பொருட்களை வாங்கி விற்க ஆரம்பித்து விடுகிறார்கள். இதனால் வாங்குபவர்களுக்கு எத்தகைய நன்மையும் இல்லாமல் போய் விடுகிறது. தனித்தனியாக இஷ்டம்போல் விற்று லாபக்கொள்ளையடித்து வந்தவர்கள் கூட்டுறவு முறையில் லாபக்கொள்ளை யடிக்க ஆரம்பித்து விடுகிறார்கள்.

ஆனால் கூட்டுறவு சங்கம் அமைத்தால சில குறிப்பிட்ட நபர்களே பெரும்பாலான பங்குகளை வாங்கிக்கொள்கிறார்கள். மற்றப் பங்குகளை ஒரு சிலருக்கு அதவும் அவர்களைச் சேர்ந்தவாகளுக்கே கொடுத்து விடுகிறார்கள். சாதாரண மக்களுக்கு பங்குகிடைப்பதில்லை.

பொதுமக்களின் நன்மைக்கென்று எதை ஏற்படுத்தினாலும் ஒரு சில கொள்ளை லாப மடித்து வந்தவர்கள் தங்களின் வேட்டைக்கே அதை பயன் படுத்திக் கொள்கிறார்கள். அத்தகைய நிலைமை ஏற்பட விடக் கூடாது என்பதுதான் நமது அவா.

நிற்க, இப்பொழுது நாட்டில் துணிப்பஞ்சம் தலை விரித்தாடுகிறது ஆளுக்கு 5 கெஜமும் சிறுவர்களுக்கு 2½ கெஜமும், 2 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு அதுவுமில்லையென்று காருண்ய காங்கரஸ் சர்க்கார் கருணை கூர்ந்து முடிவு செய்திருக்கிறார்கள். இருந்தாலும் இத் துணிக் கஷ்டத்தைப் போக்க சர்க்கார் தீவிர யோசனை செய்து வருவதாகவும கூறப்படுகிறது. அதற்காகவே ஆளுக்கொரு கைராட்டினத்தைக் கொடுத்து நூல் நூற்கச்-செய்யும் ஆராய்ச்சியிலிறங்கி யிருப்பதாகவும் சொல்லப் படுகிறது. அவை ஒருபுறமிருக்க, மகாண நூல் ஆலோசனைக் கமிட்டியினர் நூல் வினியோகிப்பது சம்பந்தமாக சிலயோசனைகளை சர்க்காருக்கு எடுத்துக் கூறியிருப்பதாகத் தெரிகிறது.

கள்ள மார்க்கட்டை ஒழித்து கைத்தறி ஜவுளி விலையை நல்ல முறையில் கட்டுப் படுத்த வேண்டுமானால், கூட்டுறவு சங்கங்களில் சேர்ந்த தறிகளுக்கே நூல் சப்ளை செய்ய வேண்டும் என்று ஷை கமிட்டி கருதுகிறது.

15 JAN 1947

ஆகவே, இப்பொழுதுள்ள கூட்டுறவு சங்கங்களை விரிவுபடுத்தி எல்லா தறிகளும் சேர்க்கப்படும் முறையில் இன்னும் பல நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்தவேண்டும்

கைத்தறி ஜவுளியில் சம்பந்தப்பட்டவர் எல்லோருக்கும் உத்தேச கூட்டுறவு சங்கங்களில் இடம் தர ஏற்பாடு செய்ய வேண்டும்; சுயேச்சையான தறிகாரர்களுக்கு தாராளமாக பங்குகள் ஒதுக்கிய பின்னர் மீதமுள்ள பங்குகளை மாஸ்டர் வீவர்களுக்கும் கைத்தறி ஜவுளி, நூல் வியாபாரிகள் ஆகியோர்களுக்கு ஒதுக்கவேண்டும் என்றும் யோசனை கூறியிருக்கிறது.

நூல் விநியோகிப்பது சம்பந்தமாக இக்கமிட்டி செய்திருக்கும் யோசனைகள் பாராட்டக் கூடியவைகளே யாகும். மில்லிலிருந்து நூலை நேராக இச்சங்கங்கள் வாங்கி விநியோகித்தால் எல்லா லாபமும் நூலை வாங்கும் தறிகாரர்களுக்குப் போய் சேரும். இதனால் தறிக்காரர்களுக்கு லாபமுண்டு; கூலியைக் குறைத்துக் கொள்ள இடமுமுண்டு; கைத்தறி ஜவுளியின் விலையும் குறைய ஏதுவுமுண்டு.

யோசனை நல்லது தான். ஆனால், இந்த யோசனையில் கூறப் பட்டுள்ளபடி அச்சங்கங்கள் வேலை செய்யுமா என்பதுதான் கேள்வி. நாட்டிலே எவ்வளவோ சங்கங்கள் கூட்டுறவு முறையில் நிறுவப்பட்டன. ஏழை மக்களுக்கு உதவி புரியும் நல்லெண்ணத்தின் மீது தான் அவையாவும் துவக்கப் பட்டன. ஆனால் அவை பெரிதும் நாளடைவில் வேலை செய்ய முடியாமல் போய் விட்டதை இன்றும் காணலாம்

கூட்டுறவு முறையில் நெசவு ஆரம்பிக்கப்பட்டது; புதிதாக குடியேறுவது (செட்டில்மெண்ட்) துவக்கப்பட்டது; பண்ணைகள் நிறுவப்பட்டது. இன்னும்இதுபோல பலமுயற்சிகள் செய்யப் பட்டன. ஆனால் ஒன்றாவது வெற்றி பெற்றதாக சொல்வதற்கில்லை. காரணம் என்ன? இவர்களோ ஏழைகள் இவர்களால் சரிவர பணம் செலுத்த முடிவதில்லை. அதனால் அச்சங்கம் வேலை செய்ய முடியாது போய் விடுகின்றன. அவ்வாறு போய்விடக் கூடாது இக்கமிட்டியார் கூறியிருக்கும் சங்கங்களும் என்பதுதான் நமது பேரவா.

நூலை வாங்குவதற்கு மட்டும் கூட்டுறவு சங்கங்கள் இருத்தல் போதாது, நூலை நூற்றபின் ஜவுளியை விற்பதிலும் இதுபோலவே கூட்டுறவு முறையில் விற்கலாம் இதனால் தறிகாரர்களுக்கு இரு வகையில் இலாபம் உண்டு. ஒன்று நூலை வாங்குவதில், மற்றொன்று ஜவுளியை விற்பதில். இவ்விரு இலாபங்களையும் இடையிலுள்ளவர்கள் தட்டிக் கொண்டு போகாமல், தறிகாரர்களே பெறலாம் விலையையும் குறைத்து விற்கலாம். பொது மக்களுக்கு நன்மையுமுண்டு.

அடுத்தபடியாக, இம்மாகாணத்தில் மில்களில் உற்பத்தியாகும் நூல்களை யெல்லாம் இம்மாகாணத்திலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கே கிடைக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும், வெளி மாகாணத்திற்கு ஏற்றுமதி செய்யக் கூடாது என்றும் நூல் ஆலோசனைக் கமிட்டியார் சர்க்காராருக்கு சிபார்சு செய்திருக்கிறது. இந்த யோசனையும் வரவேற்கக் கூடியதுதான். ஆனால் இன்றுள்ள அரசியலமைப்பு முறையில் இதைச் செய்ய மாகாண சர்க்காருக்கு அதிகார முண்டா என்பது தான் சந்தேகத் திடமுள்ள காரியமாகும். ஜவுளி நூல் சம்பந்தப்பட்ட விஷயங்கள் இந்திய சர்க்காரைச் சேர்ந்தது. இதில் மாகாண சர்க்கார் தலையிட முடியுமா? எனவே, மாகாணசர்க்கார் மத்திய சர்க்காரை கேட்டுக்கொள்ள முடியுமே யல்லாது தடை விதிக்க முடியாது. நாடு தனியாக பிரிக்கப்பட்டு, நிர்வாகம் தனியாக ஏற்படுத்தப் பட்டாலொழிய இது போன்ற காரியங்களைச் செய்ய முடியாது.

மற்றும், ஷை கமிட்டி, நூல் உற்பத்தியை பெருக்க எல்லா மில்களும் மூன்று ஷிப்டுகள் வேலை செய்ய வேண்டும், மில் தறிகளுக்கு அதிக வேலை நேரம் அனுமதிக்கப் படக் கூடாது என்று சிபார்சு செய்திருக்கிறது.

கைத்தறிகாரர்களின் நன்மைக்காகவே, மில்களை ஒழிக்க முடிவு செய்திருக்கும் பிரதமர் பிரகாசம் காரு முன்வந்திருக்கும் நேரத்தில், நூல் ஆலோசனைக் கமிட்டியானது மில்களில் நூல் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறது. இதிலிருந்து, கைத்தறிகாரர்கள் வாழ்க்கை உயர்வடைய வேண்டுமானாலும், மில்கள் இருக்க வேண்டும், அவைகளில் நூல் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பது விளங்கும். எனவே, பிரகாசம் காருவின் மில் ஒழிப்பு திட்டத்தினால் முதலில் பாதிக்கப் படுகிறவர்கள் கைத்தறிக்காரர்கள் என்பதை கைத்தறிக்காரர்கள் உணர வேண்டும் அவர்கள் தான் முதலில் தங்கள் எதிர்ப்பைக்காட்ட வேண்டும் இல்லையேல் இவர்கள் நிலைதான் கெடும். கூட்டுறவு சங்கங்கள் அமைப்பதற்கு முன் இதில் கவனம் செலுத்த வேண்டும் சரக்கு இல்லாமல் சங்கம் அமைத்து பலன் என்ன? எது முக்கியம்? சங்கமா? சரக்கா? சிந்தித்துப் பாருங்கள்.

# திருவாங்கூரில் அடக்குமுறை யாட்சியா

திருவிதாங்கூரில் சர். சி. பி. தர்பார் உச்ச நிலையை யடைந்து விட்டது. கம்யூனிஸ்ட்டுகள் வேட்டையாடப்படுகின்றனர். நாற்றுக் கணக்கில் சுட்டுக்கொல்லப்படுகின்றனர். நாற்றுக்கணக்கில் என்றால் மிகைப் படுத்திக் கூறப்படுகிறது என்று திருவிதாங்கூர் சர்க்கார் அறிக்கை விடுகிறது. அவ்வறிக்கையிலே காணப்படுகிறதை கீழே தருகிறோம் பாருங்கள். அச்சம்பவத்தை நாற்றுககணக்கில் என்று சொல்லாமல் என்னவென்று சொல்லுவது.

சமீபத்தில் திருவாங்கூர் சமஸ்தானத்தில் கம்யூனிஸ்ட்கள் செய்த கலவரத்தில் போலீசாரும் ராணுவமும் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மிகவும் மிகைப்படுத்திக் கூறப்படுவதாகவும் உண்மையில் மாண்டவர்களின் எண்ணிக்கை **சுமார் 190** தான் என்றும் திருவிதாங்கூர் சர்க்கார் விடுத்துள்ள அறிக்கையொன்று கூறுகிறது, இது தினசரித்தாள்களில் வெளிவந்திருக்கிறது.

சுமார் 190 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்வதில் என்ன தப்பு? இவ்வாறு ஒரு கொள்கைக்காக பாடுபடும் மக்களை சுட்டுக்கொல்லுவது நேர்மையா? ஜனநாயகமா? அவரவர்கள் கொள்கையை பரப்ப அவரவர்களுக்கு உரிமை வேண்டாமா? சமுதாய அமைப்பை திருத்தியமைக்க பாடுபடும் மக்களை இத்தகைய அடக்கு முறையினால் அடக்கி விடலாம் என்று நினைப்பது அறிவுடைமையாகாது. உலகில் எவ்வளவோ சக்திகள் முயன்று பார்த்தும் கம்யூனிசம் ஓங்கி வளர்ந்துதான் வருகிறது. ஜார மன்னன் எவ்வளவோ அடக்கு முறையைக் கையாண்டான். அப்படியிருந்தும் அம் மரம் முளைத்து வளர்ந்து உலகிற்கே நிழல்தரக் கூடிய அளவில் பரவி விட்டது. ஜாரின் அடக்குமுறை அவ்வளவு தூரம் அன்று ரஷ்யாவில் இல்லாதிருந்தால், கம்யூனிசம் இவ்வளவு சீக்கிரத்தில் அங்கு தோன்றியிருக்காது. அதுபோலவே, சர். சி. பி. யின் அடக்குமுறையும் நன்மைக்கே என்றே கருதவேண்டும். அவரது அடக்குமுறையினால்தான் திருவிதாங்கூரில் கம்யூனிசம் முதல்முதலாவதாக தோன்றப்போவது நிச்சயம். எனவே, இவ்வடக்கு முறையினால் அவ்வியக்கத்தை அழித்துவிட முடியாது. மக்கள் ஆதரவு இல்லாமல்போனால் அவ்வியக்கம் தானகவே அழிந்துவிடும். மக்கள் ஆதரவு இருந்து வரும்வரை அதை யாராலும் அழிக்க முடியாது.

# விவசாய வருமானவரி

விவசாய வருமானவரி பற்றிய மசோதா ஜனவரி மாதம் சென்னை அசம்பளி கூடும்போது கொண்டுவரப்படுமென்றும், வரி விதிப்பு திட்டத்தைத் தயாரிக்க நியமிக்கப்பட்டுள்ள விசேஷ அதிகாரி திரு. எஸ். எஸ். சாஸ்திரி டிசம்பர் முதல் தேதி பதவி ஏற்கிறார் என்றும் வருஷத்திற்கு ரூபா 5000க்கு மேல் விவசாய வருமானம் உள்ளவர்களுக்கே இந்த வரி விதிக்கப்படும் என்றும் ஒரு செய்தி வெளிவந்திருக்கிறது.

இன்றுள்ள நிலவரி முறை திருத்தியமைக்கப்பட வேண்டும். இம் முறையானது மிகுந்த குறைபாடுள்ளது என்று பலரால் கண்டிக்கப்பட்டு வந்திருக்கிறது. ஒரு ஏக்கரா நிலம் வைத்திருக்கிறவருக்கு என்ன விகிதப்படி வரி விதிக்கப்படுகிறதோ அதே விகிதப்படிதான் 1000 ஏக்காவுள்ளவருக்கும் வரி விதிக்கப்படுகிறது. இது நியாயமற்ற முறை. இதை திருத்தியமைக்க வேண்டும். இது பற்றி திராவிடர் கழக மாநாடுகளில் வற்புறுத்தப்பட்டு வந்திருக்கிறது. இன்றைய நிலவரி முறை திருத்தியமைக்கவேண்டும் என்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு வந்திருக்கின்றன. இப்பொழுதாவது சென்னை சர்க்கார் முன் வந்திருப்பது பாராட்டக் கூடியதுதான்.

ஆனால், ரூபா 5000க்கு மேல் வருமானமுள்ளவர்களுக்கு மட்டும் வரி விதிக்க உத்தேசித்திருப்பதால் இன்றுள்ள குறைபாடுகள் ஒழிந்துவிடாது. ஒரு குறிப்பிட்ட அளவு நிலம் வைத்திருப்பவர்களுக்கு. வரி இல்லாமலும் அதற்குமேல் நிர்ணயவரை நிலம் வைத்திருப்பவர்களுக்கு ஒரு விகிதமும் அதற்குமேல் வைத்திருப்பவர்களுக்கு அதைவிட அதிக விகிதப்படியும் ஆக படிப்படியாக உயர்த்திக்கொண்டே போகவேண்டும். இவ்வாறு படிப்படியாக வரி உயர்த்திக்கொண்டேபோனால்தான், அதிக நிலம் வைத்திருப்பவர்களின் வருமானம் வீணில் விரயமாகாமல் பொது மக்களுக்குப் பயனளிக்கக் கூடிய முறையில் உதவும். இம்மாதிரி படிப்படியாக வரியை உயர்த்திக் கொண்டுபோகாமல் ஒரே விகிதாச்சாரப்படி ரூபாய் 5000க்கிமேல் வருமானமுள்ளவர்களுக்கு எல்லாம் ஒரே விகிதவரி என்று ஏற்படுத்தி விடுவதால் இன்றுள்ள குறைபாடுகள் தீர்ந்துவிடாது. இன்று இம்முறை அதாவது ஒரு ஏக்கராவுள்ளவர்களுக்கும் 100 ஏக்கரா அல்லது 1000 ஏக்கராவுள்ளவர்களுக்கும் ஒரே விகிதப்படிவரி இருப்பதுதான் முறையல்ல என்று கூறுகிறோம். இனியும், இதே முறையில் வரி விதிக்கப்படுமானால் அது எங்ஙனம் திருத்தியமைக்கப்பட்டதாக ஆகும்? எனவே, வரி விதிப்பு முறை அடியுடன் திருத்தியமைக்கப்படவேண்டும்.

அதுமட்டும் போதாது, புதுப் புது வரிகள் விதிக்கப்படுவதால், பொது மக்களின் சௌகரியங்கள் அதிகப்படவேண்டும். ஆனால் இதுவரை எவ்வளவோ புதுப் புது வரிகள் தோன்றியிருக்கின்றன இருந்தபோதிலும் மக்களுக்கு எந்தவித நன்மையும் அதன் மூலமாக ஏற்பட்டதாக சொல்வதற்கில்லை. அதிலும் கிராம மக்களின் நிலை ஒரு சிறிதும் மாறவில்லை, ஏதாவது சௌகரியங்கள் ஏற்படுவதாயிருந்தால், அவைகளும் நகரத்திலுள்ளவர்களுக்குத்தான் கிடைக்கிறது.

நமது நாட்டில் பெரும்பாலான மக்கள் கிராமங்களில் வாழ்கிறார்கள். பல கோடிக்கணக்கான மக்கள் கிராமங்களில்தான் வசிக்கிறார்கள். இக் கிராமங்களுக்கு போதுமான நீர் வசதியில்லை; விளக்கில்லை சுகாதார வசதியில்லை; சுத்தமாக்கும் ஏஜன்சிகளில்லை. எல்லா வசதிகளும் சர்க்கார் வம்சத்தார் வாழும் நகரங்களில் தான் இருந்து வருகின்றன. அங்குதான் எலக்ட்ரிக் வெளிச்சம், தார் ரோடுகள், டிராம்வேக்கள், மருத்துவ சிகிச்சைகள், குழந்தை பாதுகாப்புகள், பீச்சுகள், மோட்டார்கள், சினிமாக்கள், இன்னும் பல. கிராமங்களில் வசிக்கும் மக்கள் 30 கோடிக்குமேல் இருப்பார்கள். நகரங்களில் வசிப்பவர்கள் 10 கோடிக்குள்ளாகவேயிருப்பார்கள். அப்படியிருந்தும் எல்லா சௌகரியங்களும் நகரங்களில் வசிப்பவர்களுக்கே கிடைக்கிறதேயல்லாது கிராமங்களில் வசிப்பவர்களுக்குக் கிடைப்பதில்லை. இங்குமட்டுமல்ல, எந்த இராஜ்யத்திலும் இதே நிலைதான். எந்த நாட்டிலாவது பெரும்பான்மையான மக்கள் கவலையற்று சந்தோஷமாக சுகமாக வாழ்ந்து வந்ததாகவோ வாழ்வதாகவோ சொல்வதற்கில்லை. அரசுகள் ரயில்வேக்களையும் கப்பல்களையும், வாராவதிகளையும் ரோடுகளையும் போட்டு ஒரு சில வர்த்தகர்களை செல்வந்தர்களாக அவர்கள் வாழ்வு உயர்வடைய உதவி செய்தனவேயல்லாது, பொது மக்கள் வாழ்க்கை உயர்வடைய ஒரு சிறிதும் உதவியதாக கூறுவதற்கில்லை. இந் நிலைமை மாற்றியமைக்கப்படவேண்டும்.

விவசாய வருமானம் என்பது நிலத்தில் விளையும் தானியத்தில் மதிப்பு என்பதாகும். ஒரு பொருளுக்கு மதிப்பு ஏற்படுவது, மனிதனின் உழைப்பின் காரணமாகவேயாகும். ஒரு நிலச்சுவான்தாருக்கு ஒரு குறிப்பிட்ட ரூபாய் வருமானம் என்றால், நூற்றுக்கணக்கானவர்களின் உழைப்பு என்பதுதான் பொருள். இப்பொழுது சர்க்கார் ரூ 5000க்கு மேல் வருமானவரி விதிக்கப் போவதாகக் கூறப்படுகிறது. இதன் பொருள் பலருடைய உழைப்பை சர்க்கார் பெறப்போகிறார்கள் என்பதுதான் நூற்றுக்கணக்கான பாட்டாளிகளின் உழைப்பை உறிஞ்சும் சர்க்கார் அப்பணத்தைக் கொண்டு உழைப்பாளிகளுக்கு உதவி புரியக் கூடிய வகையில் கிராமங்களுக்கு குடி தண்ணீர் வசதி, ரோட்டு வசதி, எலக்ட்ரிக் வசதி, வாராவதி வசதி முதலியவைகள் ஏற்படுத்தி, ஆஸ்பத்திரி சிசுபாதுகாப்பு விடுதிகள், நாடகக் கொட்டகைகள், சினிமாக்கள், ரேடியோக்கள் முதலியன ஏற்படுத்தித் தர வேண்டும்.

இதை விடுத்து, சர்க்கார் ஒருபக்கம் தங்களுடைய சிப்பந்திகளுடைய சம்பளத்தை உயர்த்தவும் சேவகர்கள் சிப்பாய்கள் அமைக்கவும், மற்றும் சர்க்கார் விதிக்கும் பல செலவுகளுக்கெல்லாம் செலவிடவும் கூடாது. இவ்விவசாயிகள் படிப்பிற்கும், உணவிற்கும், நாகரிக வாழ்விற்கும் வேண்டிய கல்வி, சுகாதாரம், வைத்தியம், மருத்துவம் முதலிய வசதிகளுக்கே உபயோகப் படுத்தப் படல் வேண்டும். சர்க்காரர் தாங்கள் என்ன செய்யப்போகிறோம் என்பதை மக்களுக்கு எடுத்துக் காட்டினால் தான் வரி விதிப்பு நேர்மையாக யிருக்கும். எனவே தம் நோக்கம் என்ன என்பதை விளக்க முன்வருவார்களா? சர்க்காரார்.

# நல்லயோசனைதான் ஆனால்...?

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனுக்கும் உரிமையில் வேற்றுமை யிருத்தல் கூடாது. யாவரும் சமமாக அனுபவிக்க வேண்டியதே. நிறத்தின் காரணமாகவோ, பிறப்பின் காரணமாகவோ வேற்றுமை கற்பிப்பது மிகக் கொடுமையான காரியமாகும். பிற நாட்டில் நிறத்தின் காரணமாக உரிமைகள் மறுக்கப்படுகிறது. இந்நாட்டிலோ என்றால் பிறவியின் காரணமாக உரிமைகள் பறிக்கப்பட்டு வருகிறது. இக்கொடுமை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. இதற்கு மத நூல்கள் புராணங்கள் முதலியவைகள் துணை புரிந்து வருகின்றன. இதனால் இக்கொடுமை நகரங்களைவிட கிராமங்களில்தான் அதிகம்.

அதாவது தீண்டாமையின் உண்மை சொரூபம் கிராமங்களில்தான் இன்று பார்க்க முடியும். அங்குதான் அவர்கள் மிகக் கொடுமைப் படுத்தப்படுகின்றனர். எந்தத் துறையிலும் முன்னேற வழியின்றி கஷ்டப்படுகின்றனர். இதை சென்னை மந்திரியார் தோழர் கூர்மையா அவர்கள் கூர்மையாக கவனித்து வந்திருப்பதைக்காண நாம் மகிழ்ச்சியடைகிறோம். இவ்வாறு கொடுமைப் படுத்தப்படுவதை சட்டப்படி தண்டிக்க ஒரு சட்டம் கொண்டுவரப் போவதாக கூறியிருப்பது வரவேற்கக் கூடியதாகும். ஆனால், சட்டம், இதற்குமுன் காப்பி ஹோட்டல்களிலும் பொது இடங்களிலும் "ஹரி"ஜனங்களை அனுமதிக்கலாம் என்று ஏற்படுத்திய சட்டத்தைப் போல் உதவாக்கரையாக ஆகிவிடக்கூடாது. பயனுள்ளதாகயிருக்கவேண்டும். மக்கள் மனதில் மாற்றம் ஏற்படச் செய்யவேண்டும். சிறுவர்கள் கற்கும் பாடங்களில் தீண்டாமையைக் குறிக்கும், சாதியைக் குறிக்கும் சொற்களோ பாடங்களோ வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். சாதியைக் குறிக்கும் எந்தப் புத்தகங்களும் பொது இடங்களில் வைத்தல்கூடாது. இவைகளைச் செய்யாமல் தண்டிக்கப்படும் என்று தெரிவித்து விடுவதாலோ சட்டம் செய்து விடுவதாலோ கோரிய பலன் கிடைக்காது. இது இன்றுள்ள மக்களின் மனக்கொதிப்பை அடக்கவும் வரும் தேர்தல்களில் தங்கள் கட்சிக்கு ஆதரவு தேடுவதற்காகவும் செய்யப்படும் காரியம் என்றுதான் கொள்ள நேரிடும். எந்த உருவில் சட்டம் வெளிவருகிறது? என்ன செய்யப்போகிறார்கள்? என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

## பிறப்பு

ராயல் இந்தியக்கடற்படையைச்சேர்ந்த இளம்பேச்சாளரும் எழுத்தாளருமான வந்தவாசி ஜனாப் S. K. ரஜாக் சகோதரர் ஹாலித் சாயபு துணைவியாருக்கு 12-11-46 காலை 6-மணிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. குழந்தைக்கு கம்ருன்னிசா எனப்பெயர் வைக்கப்பட்டது தாயும் சேயும் சுகம்.

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

(செல்வி போகிருள். வேலன் பாடுகிருன்)

"பொன்னவிர் லோகத்திலே—உள்ளம்
பூரிக்கும் காதலிலே
என்னுளும் கன்னியுளம்—இணைந்
திருந்தும், இன்ப உடல்

தன்னைப் பயிலுவதோர்—நல்ல
சந்தர்ப்பம் இல்லை யென்றே
தன்னையும் தையலையும்—பெற்ற
சமூகத்தை நொந்தான்"

காட்சி 7

(தன் அறையிலிருந்தபடி மரகதம்
வீணையோடு பாடுகிருள்)

"அண்டை இல்லத்தினிலே—என்
அன்பன் இருக்கிருன்
உண்ணும் அமுதிருந்தும்—எதிர்
உண்ண முடிந்த தில்லை

தண்டமிழ்ப் பாட்டிருந்தும்—செவி
சாய்த்திடக் கூடவில்லை
வண்மலர் சூடவில்லை—அது
வாசலிற் பூத்திருந்தும்"

(தெய்வயானை வருகை)

**தெய்வயானை** :—மரகதம்!

**மர** :—அம்மா

**தெய்** :—இதெல்லாம் உனக்கே நன்ருயிருக்கிறதா?

**மர** :—என்னம்மா சொல்லுகிறீர்கள்?

**தெய்** :—வர வர நீ கெட்டு விட்டாய்; நல்ல நாள் பொல்லாத நாளோ யில்லை, இன்றைக்குக் கந்தர் சஷ்டி. எல்லாரும் விரத மாச்சே, கோங்காலத்திலே குளிச்சி முழுகி, பத்தியும் பணியுமாய் வேலையைப் பார்க்காமல், இன்றைக்கு அந்த அவமான காதல் பாட்டு! என்னடி மகா காதலைக் கண்டு விட்டாய், காதல்! சே! சே!

**மர** :—கோபித்துக்கொள்ளவேண்டாம்மா, இன்று என்ன விரதம்?

**தெய்** :—கந்தர் சஷ்டி.

**மர** :—இந்த விரதத்திற்குக் காரணமாகிய கந்தன், குறமகள் வள்ளியின் மேல் கொண்ட காதலையும், அதற்காக அவன் பட்ட பாடுகளையும் நீ கேவலமாகத்தான் நினைக்கிருய்! இல்லையா?

**தெய்** :—அது தெய்விகக் காதலடி! மானிடர்களுக்குச் சித்திக்குமா அது? அதெல்லாம் பேரின்பம்!

**மர** :—அம்மா! மானிடத்தன்மைக்கு அடுத்தபடி தெய்விகத்தன்மை யென்று சொல்லுகிறார்கள், மனிதரிடையே தோன்றும் பரிசுத்தமான காதல்தான் தெய்வீகக் காதலாகிறது பேரின்பமும் அதுதான் காதல்; வெறும் கலியாணக் கூட்டுறவல்ல, சந்தையில் கிடைக்கும் சரக்குமல்ல; உயிரோடு கலந்த உண்மைக் காதல், உலக எதிர்ப்புக்கஞ்சாது. உயர்வு தாழ்வை மதிக்காது. மதித்திருந்தால் குறமகள் வள்ளியை புராணப்படி, முருகன்தான் மணந்திருக்க முடியுமா? அம்மா! காதலின் பெருமையைச் சொல்லாத நமது காவியங்களேது? கலைகள்தாம் எது? உலகப் படைப்பே காதலெனில் காதலற்ற உயிர்தானேது? கடவுளும் மனிதரும் காதலின் முன்பு ஒன்றுதானம்மா!

**தெய்** :...உன்னிடம் விவாதம் செய்யவா வந்தேன்! மரகதம்! நீ சொல்வதை ஒப்புக்கொள்கிறேன் என் சொல்லையும் கொஞ்சம் கேளடியம்மா!

**மர** ;—இப்போ என்னம்மா செய்யச்சொல்றே?

**தெய்** :—எதையோ மனதில் வைத்துக்கொண்டு, வேளா வேளைக்கு இப்படிக் குளிக்காமலும், சாப்பிடாமலும், பித்து பிடித்தவள் போலிருக்கக் கூடாதம்மா, எழுந்துவா, போய் வீட்டுக் காரியத்தைப் பார்ப்போம்.

**மர** :—இதோ வந்திட்டேம்மா! (போகின்றனர்)

காட்சி 8

(மிட்டா மளிகையில்)

**சொக்** :—ஒருத்திக்கு ஒரே மகன், பெரிய ஜமீன், நிரந்தரமான சொத்து, நல்ல செல்வாக்கு! மாசிலாமணியைப்போல் மாப்பிள்ளை மரகதத்திற்கு வாய்ப்பது அரிது!

**பொன்** :—(யோசித்து) என்ன இருந்தாலும் இரண்டாந் தாரம், அதைப்பற்றித்தான் கொஞ்சம்......!

**தெய்** :—பாதகமில்லை, வயது அதிகமில்லை யென்றுதானே தம்பி சொல்கிருன், எதற்கும் பார்ப்போமே.

**பொன்** :—தெய்வானே! நாம் பார்ப்பதோடு மரகதமும் பார்க்க வேண்டும், வாழ்க்கை நடத்தப் போகிறவள் அவள்தானே?

**சொக்** :—அவள் என்னப்பா பார்ப்பது? நமக்கு அந்தஸ்தல்லவோ பிரதானம்? மரகதத்தை அவர் நன்ருக பார்த்திருக்கிறார் அதுபோதும். மரகதம் விரும்பினுலும் விரும்பாவிட்டாலும், அவள் மாசிலாமணியின் மனைவிதான், பெண்ணுக்கு உரிமை தருவதே பேதமை! ஒரு நல்ல நாள் பார்த்து முறைப்படி பெண் பார்க்க வரச்சொல்லி அவர்களுக்கு கடிதம் எழுதிவிடுகிறேன். என்னப்பா?

**பொன்** :—(யோசித்து) உம்...சரி, செய்,...பார்ப்போம்...
(பக்கத்து அறையில் வெங்கல பாத்திரமொன்று "கணீ" ரென்று விழுகிறது)

**தெய்** :—யாரம்மாது அங்கே பாத்திரத்தை உருட்டுவது? (எழுந்து போய்ப்பார்த்து) ஓ! நீ தானு? இங்கென்னம்மா செய்யறே?

**மர** :...அங்குவரத்தான் வந்தேன் கலியாணப்பேச்சு காதில் விழுந்ததும், கதிகலங்கி போய்விட்டேன்! கையிலிருந்த பாத்திரமும் நழுவிப்போயிற்று.

**தெய்** :—கலியாண மென்ருல் களிப்படைவதைவிட்டு, கதிகலங்கு வாருமுண்டோ? என்னடி இது வேடிக்கையாயிருக்கிறதே!

**மர** :—எனக்கு இப்பொழுது கலியாணமே வேண்டாம், பிறகு செய்துக் கொள்கிறேன் அம்மா தயவுசெய்து என்னை விட்டு விடுங்கள், துன்புறுத்த வேண்டாம்.

**தெய்** :—என்னடி துன்பத்தைக்கண்டாய், மகா துன்பம்.

**மர** :—(வருந்தி) தானுகப் பழுக்காத காயை தடிகொண்டடித்தால் கனியாது, பலத்காரம் வாழ்வைப் பாழாக்கும்! தயவுசெய்து அண்ணாவிடம் சொல்லி விடம்மா, கடிதம் எழுதவேண்டாமென்று!

**தெய்** :—உன் அப்பாவே சொல்லி விட்டார் எழுதச் சொல்லி. இனி என்னால் ஒன்றும் முடியாது. (போகிருள்)

**மர** :—(யோசித்து) ஆ!...அண்ணு என்மீது கொண்ட கோபத்தின் எதிரொலியா இது...பேத புத்தியில் விளைந்த பெருங்கேடா இது? உலகமே! ஆண்மகனுக்குரிய உணர்ச்சிகள் யாவும் பெண்மகளுக்கும் உண்டென்பதை உன் மக்களுக்கு நீயேன் சொல்ல வில்லை? என் நெஞ்சில் பதிந்திருக்கும் வேலனின் சித்திரத்தை அழுத்தெழுதும் வன்மை யாருக்குண்டு? காதல்!... காதல் மனித வாழ்வுக்கு உயிரென்பது மனிதர்களுக்கே தெரியாதா?

(தொடரும்)

# உலக வறுமைக்குக் காரணம்?

(ம. சிங்காரவேல்)

உலக மக்களுக்குப் போதுமான உணவும், ஆடையும், வீடும் போதுமானதற்கு மேலாகவே உலகில் உண்டாக்கப்படுகிறது என பல மெய்ஞானிகளும் கூறுகின்றார்கள்.

நமது பார்வைக்குத் தோன்றும் இந்த உண்மையை அரசுகளும் ஒத்துக்கொள்கின்றன.

அப்படி யிருந்தும், பற்றாக் குறையும், இல்லாமையும் மக்களைப் பண்டைக்கால முதல் வாட்டி வருகின்றன.

பொருளாதார நிபுணர்கள், உலகம் வருந்துவது இல்லாமையாலல்ல, அதிகத்தால் வருந்துகின்றது என்று கூறுகின்றார்கள்.

இந்த அதிகம் எந்த மக்களுக்கு உபயோகப் படுகின்றது?

மக்கள் உழைப்பால் உண்டான இந்த அதிகம் மக்கள் வயிற்றுக்கு உதவாமல், உலக ஆடம்பரங்களுக்கு விநியோகிக்கப் பட்டு வருவதால், பண்டைக்கால முதல் நாளது வரை உலகம் படும் துயரத்திற்கு, இந்தத் துர்விநியோகம் முதற் காரணமாயிருக்கிறது.

இந்த 'அதிகம்' கோவில்களுக்கும் குளங்களுக்கும் மூட பக்தியை வளர்க்க உபயோகப்பட்டு வருகின்றது.

மனிதனுடைய வீண் பெருமையை வளர்க்கும் நவரத்தினங்களுக்கும் நகைகளுக்கும் உபயோகப் பட்டு வருகின்றது.

கல்லுக்கும் செம்புக்கும் செய்யும் நிவேதனங்களால் விளையும் மூட நம்பிக்கையை வளர்க்க உதவுகின்றது.

மனிதனை மனிதன் கொல்லும் ஆயுதங்களுக்காக செலவிடப் படுகின்றது.

இந்த 'அதிக'த்தைக் கொண்டு டம்பத்தை வளர்க்கும் வசதிகளுக்கு செலவிடப் படுகின்றது. இந்த மிகுதியை தானத்திலும் செலவிட்டு மக்களை சோம்பேறியாக்கும் காரியம் செய்யப்படுகிறது.

சத்திரங்களும் சாவடிகளும் அன்ன தானங்களும், சொர்ண தானங்களும், பிராமணர்கட்கும், மடாதிபதிகட்கும், வழக்கிற்கும், வில்லங்கத்திற்கும், உதவுவது இந்த மிகுதியன்றோ?

நமது நாட்டு 556 சிற்றரசர்களும், ஜமீன்தார்களும், மிராசுதார்களும், சுரோத்திரியதார்களும் உழைப்பின்றி உடலை வளர்க்கும் நிலச்சுவான்களும், கடன் கொடுத்து வட்டி வாங்கும் சோம்பேறிகளும், யாதொரு உழைப்புமின்றி மோட்டார் கார்களில் சோம்பித்திரிவது இந்த மிகுதியாலன்றோ?

வாழ்விற்கு அத்தியாவசியமில்லாமலும் தேவைக்கு அதிகமாகவும் சம்பளத்தை பெறும் ராஜப்பிரதிநிதிகளும், கவர்னர்களும்; ஜட்ஜுகளும், கலெக்டர்களும், பெரிய அதிகாரிகளும் தங்களுக்கு மாத்திரமல்ல, தங்களுடைய வழேழு சந்ததியாரும் வேலையின்றி பிழைத்து வாழ சேமிக்கப்படும் செல்வம் யாவும் இந்த மிகுதியாலன்றோ?

மற்றும் தாங்கள் மக்களுக்கு செய்த கொடுமை, வஞ்சகம், ஒழுக்கயீனமான காரியம் ஆகியவைகளுக்கு "மன்னிப்பும்" "மோக்ஷத்திற்கு இடமும்" பெறுவதற்கு செய்யப்படும் செலவும் இந்த மிகுதியாலன்றோ?"

எனவே, வறுமைக்கு இல்லாமையா? அதிகமா? என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

———

வெள்ளை, வெட்டை முதலிய உஷ்ண வியாதிகளுக்கு
எங்கும் பிரசித்தி பெற்ற

**இராஜாளி எண்ணெ**

எந்த மருந்தினாலும் தீராத நாள்பட்ட வெள்ளை, வெட்டை, மஞ்சள், ரத்தசீழ், வெள்ளை, நீரடைப்பு, நீர் கடுப்பு, நீர் எரிச்சல், நீர் எரிவு, நீரிழிவு, ஆண்குறி நரம்புவலி, வீக்கம், சொரி, சிரங்கு, ஊரல், படை, கிரந்தி, புண், கைகால் பிடிப்பு, தந்திருலை, நாபிரணம், கெற்பரணம், முதலிய மிக கொடிய மேக வியாதிகளை மறுமுறை வாராதபடி வேரற நீக்கக் கூடிய மருந்து. இதற்கு நிகர் வேறு இல்லை. குறைந்த விலை நிறைந்த குணம்..

பூர்ண குணத்திற்கு உத்திரவாதமுள்ளது புட்டி 1-க்கு ரூ. 2—0—0

தயாரிப்பவர் : சித்தவைத்திய பண்டிட் **S. V. இராஜரத்தினக் கவுண்டர், R. I. M. (P)**

சேர்மன் தம்மண்ண செட்டி ரோட், அரிசிப்பாளையம், சேலம், S. I.

முந்துங்கள் ! முந்துங்கள் !!
இன்றே ஆர்டர்களுக்கு முந்துங்கள் !!!

எங்கும் புகழ்பெற்ற N. K. D. வேல் அவர்களால் டைரக்ஷன் செய்யப்பட்ட சாயத்தொழில் நிபுணர்களால் பரிசோதிக்கப்பட்டு மேல் நாட்டின் தயாரிப்பைக் காட்டிலும் உயர்ந்தவை என்ற உத்திரவாதத்துடன் அனுப்பப்படுவது?

சாயத் தொழிலுக்கு முதன்மை பெற்றது.

செல்வம் டர்க்கிரெட் ஆயில்கள் அண்டு கெப்தால் சோப்

ஒரே மணி நேரத்தில் நூல் நனைந்து நன்றாய் ஊறிவிடும். அப்பொழுதே சாயங்கள் தீர்க்கலாம். சாயம் தீர்க்கப்பெற்ற நூல் மிருதுவாகவும், பாலீஷாகவும் இருக்கும்.

இண்டாந்திரியன் முதல் கெப்தால் வரை உபயோகப் படுத்தலாம். எவ்விதபரீக்ஷைக்கும் உத்திரவாதமுள்ளது. விலை விபரங்களுக்கு எழுதவும்.

**ஏஜண்டுகள் தேவை !!!**

விலாசம் :—
**செல்வம் டர்க்கிரெட் ஆயில் ஸ்டோர்,**
திருச்செங்கோடு, P. O., சேலம் ஜில்லா,

உரிமையாளர்:— வேல்.

Printed by M. Vedapuri Mudaliar at Sri Lakshmi Press 207, Bazar St., Tiruvettipuram. Edited, and Published by M. Kandaswamy, at 203, Bazar St., Tiruvettipuram. (N. A.)